# கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No.458/2023**

திரு. செந்தில்குமார் (P.W. –1) **2.7.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி:</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. 1 வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2 வது பிரதிவாதியுடன் சேர்ந்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவிற்கு கூடுதல் எதிர் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அதனால் முதல் பிரதிவாதி எதிர் கோரிக்கை மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஏற்படுத்திய 14.10.2009 தேதிய பொது அதிகார ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற நபர் இல்லை என்றால் சரி. 22.5.2023 ம் தேதிய 1ம் பிரதிவாதி பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரி. அதன் பிறகு புதிய பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மாதிரி ஆவணம் ஏற்படுத்தவில்லை. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

2. 22.5.2023 ம் தேதியில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி வரவழைத்து என்னுடைய பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்வதாக சொல்லி Life certificate பெற்று அன்றைய தேதியில் முன்பிருந்த கிரைய ஒப்பந்த ஆவணத்தை ரத்து செய்துவிட்டு என்னுடைய பெயரில் புதிதாக கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் தவறு. Life certificate ல் 1ம்

பிரதிவாதியின் கையொப்பம் சந்தேகம் இருந்ததால் தான் சார் பதிவாளர் 1ம் பிரதிவாதி நேரில் வரவழைத்து கேட்டார் என்றால் ஆமாம். 3.11.2009 என்னுடைய தகப்பனார் பெயரில் ஏற்பட்ட மோசடியானது என்றால் தவறு. 1ம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டி 2ம் பிரதிவாதியின் முகவராக இருந்து நில வியாபாரம் செய்து வந்ததால் தாவா கிரைய ஒப்பந்த மோசடியாக ஏற்படுத்தி உள்ளேன் என்றால் தவறு. 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.02 17:50:54 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.